ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

ஸ்ரீமணவாள மாமுனிகள் அருளிச்செய்த

# ॥ திருவாய்மொழி நூற்றந்தாதி ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font. Our sincere thanks to Sri. Rajasekar Ranganathan of Austin, Texas, for his help in proofreading this document.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ திருவாய்மொழி நூற்றந்தாதி ॥

## தனியன்கள்

அல்லும் பகலும் அனுபவிப்பார் தங்களுக்குச்⋆
சொல்லும் பொருளும் தொகுத்துரைத்தான்⋆- நல்ல
மணவாள மாமுனிவன் மாறன் மறைக்குத்⋆
தணவா நூற்றந்தாதி தான்

மன்னு புகழ்சேர் மணவாள மாமுனிவன்
தன்னருளால் உட்பொருள்கள் தன்னுடனே சொன்ன
திருவாய்மொழி நூற்றந்தாதியாம் தேனை
ஒருவா தருந்து நெஞ்சே உற்று

‡உயர்வே பரன்படியை உள்ளதெல்லாம் தான்கண்டு⋆
உயர்வேத நேர் கொண்டுரைத்து⋆ மயர்வேதும்
வாராமல் மானிடரை வாழ்விக்கும் மாறன் சொல்⋆
வேராகவே விளையும் வீடு (1)

‡வீடுசெய்து மற்றெவையும் மிக்கபுகழ் நாரணன் தாள்⋆
நாடுநலத்தால் அடையநன்குரைக்கும்⋆ நீடு புகழ்
வண் குருகூர் மாறன் இந்த மாநிலத்தோர் தாம் வாழ⋆
பண்புடனே பாடியருள் பத்து (2)

பத்துடையோர்க்கென்றும் பரன் எளியனாம் பிறப்பால்⋆
முத்திதரும் மாநிலத்தீர் மூண்டவன் பால்⋆ பத்திசெயும்
என்றுரைத்த மாறன் தன் இன்சொல்லால் போம்⋆ நெடுகச்
சென்ற பிறப்பாம் அஞ்சிறை (3)

அஞ்சிறைய புட்கள் தமை ஆழியானுக்கு⋆ நீர்
என்செயலைச் சொல்லும் எனவிரந்து⋆ விஞ்ச
நலங்கியதும் மாறனிங்கே நாயகனைத் தேடி⋆
மலங்கியதும் பத்தி வளம் (4)

www.prapatti.com

வளமிக்க மால்பெருமை மன்னுயிரின் தண்மை⋆
உளமுற்றங்கூடுருவவோர்ந்து⋆ தளர்வுற்று
நீங்கநினை மாறனைமால் நீடிலகு சீலத்தால்⋆
பாங்குடனே சேர்த்தான் பரிந்து (5)

பரிவதில் ஈசன் படியைப் பண்புடனே பேசி⋆
அரியனலன் ஆராதனைக்கென்று⋆ உரிமையுடன்
ஓதியருள் மாறன் ஒழிவித்தான் இவ்வுலகில்⋆
பேதையர்கள் தங்கள் பிறப்பு (6)

பிறவியற்றுநீள்விசும்பில் பேரின்பம் உய்க்கும்⋆
திறமளிக்கும் சீலத் திருமால்⋆ அறவினியன்
பற்றுமவர்க்கென்று பகர்மாறன் பாதமே⋆
உற்றதுணையென்றுள்ளமேயோடு (7)

ஓடுமனம் செய்கை உரை ஒன்றி நில்லாதார் உடனே⋆
கூடிநெடுமாலடிமை கொள்ளும் நிலை⋆ நாடறிய
ஓர்ந்தவன் தன்செம்மை உரைசெய்த மாறனென⋆
ஏய்ந்துநிற்கும் வாழ்வாம் இவை (8)

இவையறிந்தோர் தம்மளவில் ஈசன் உவந்தாற்ற⋆
அவையவங்கள் தோறும் அணையும் சுவையதனைப்
பெற்று⋆ ஆர்வத்தால் மாறன் பேசின சொல்பேச⋆ மால்
பொற்றாள் நஞ்சென்னி பொரும் (9)

பொருமாழிசங்குடையோன் பூதலத்தேவந்து⋆
தருமாறோரே துவறத் தன்னை⋆ திரமாகப்
பார்த்துரைசெய்மாறன் பதம் பணிகவென் சென்னி⋆
வாழ்த்திடுகவென்னுடைய வாய் (10)

வாயும் திருமால் மறைய நிற்க⋆ ஆற்றாமை
போய் விஞ்சி மிக்க புலம்புதலாய்⋆ ஆய
அழியாதவற்றோடு அணைந்தழுத மாறன்⋆
செறிவாரைநோக்கும் திணிந்து (11)

www.prapatti.com

திண்ணிதா மாறன் திருமால் பரத்துவத்தை⋆
நண்ணியவதாரத்தே நன்குரைத்த⋆ வண்ணமறிந்து
அற்றார்கள் யாவர் அவரடிக்கே ஆங்கவர் பால்⋆
உற்றாரை மேலிடாதூன் (12)

ஊனமறவே வந்து உள் கலந்த மாலினிமை
யானது⋆ அனுபவித்தற்காம் துணையா⋆ வானில்
அடியார் குழாம் கூட ஆசையுற்ற மாறன்⋆
அடியாருடன்நெஞ்சேயாடு (13)

ஆடிமகிழ் வானில் அடியார் குழாங்களுடன்⋆
கூடியின்பம் எய்தாக் குறையதனால்⋆ வாடிமிக
அன்புற்றார் தம்நிலைமை ஆய்ந்துரைக்க மோகித்து⋆
துன்புற்றான் மாறன் அந்தோ (14)

அந்தாமத்தன் பால் அடியார்களோடிறைவன்⋆
வந்தாரத்தான் கலந்த வண்மையினால்⋆ சந்தாபந்
தீர்ந்த சடகோபன் திருவடிக்கே நெஞ்சமே⋆
வாய்ந்த அன்பை நாடோறும்வை (15)

வைகுந்தன் வந்து கலந்ததற்பின் வாழ்மாறன்⋆
செய்கின்றநைச்சியத்தைச் சிந்தித்து⋆ நைகின்ற
தன்மைதனைக் கண்டு உன்னைத் தான்விடேன் என்றுரைக்க⋆
வன்மையடைந்தான் கேசவன் (16)

கேசவனால் எந்தமர்கள் கீழ்மேலெழு பிறப்பும்⋆
தேசடைந்தார் என்று சிறந்துரைக்க⋆ வீசு புகழ்
மாறன் மலரடியே மன்னுயிர்க்கெல்லாம் உய்கைக்கு⋆
ஆறென்று நெஞ்சே அணை (17)

அணைந்தவர்கள் தம்முடனே ஆயனருட்காளாம்⋆
குணந்தனையே கொண்டுலகைக்கூட்ட⋆ இணங்கி மிக
மாசில் உபதேசம் செய் மாறன் மலரடியே⋆
வீசு புகழ் எம்மா வீடு (18)

www.prapatti.com

எம்மா வீடும் வேண்டா என்தனக்குன் தாளிணையே⋆
அம்மாவமையுமென வாய்ந்துரைத்த⋆ நம்முடைய
வாழ்முதலாம் மாறன் மலர்த்தாளிணை சூடிக்⋆
கீழ்மையற்று நெஞ்சே கிளர் (19)

‡கிளரொளிசேர் கீழுரைத்த பேறு கிடைக்க⋆
வளரொளிமால் சோலை மலைக்கே⋆ தளர்வறவே
நெஞ்சை வைத்துச் சேருமெனும் நீடு புகழ் மாறன்தாள்⋆
முன்செலுத்துவோம் எம் முடி (20)

முடியார் திருமலையில் மூண்டு நின்ற மாறன்⋆
அடிவாரந் தன்னில் அழகர் வடிவழகைப்
பற்றி⋆ முடியும் அடியும் படிகலனும்⋆
முற்றும் அனுபவித்தான் முன் (21)

முன்னம் அழகரெழில் மூழ்கும் குருகையர்கோன்⋆
இன்னவளவென்ன வெனக்கரிதாய்த்தென்ன⋆
கரணக் குறையின் கலக்கத்தைக்⋆ கண்ணன்
ஒருமைப் படுத்தானொழித்து (22)

‡ஒழிவிலாக் காலம் உடனாகி மன்னி⋆
வழுவிலாவாட்செய்ய மாலுக்கு⋆ எழுசிகர
வேங்கடத்துப்பாரித்த மிக்கநலம் சேர்மாறன்⋆
பூங்கழலை நெஞ்சே புகழ் (23)

புகழொன்று மால் எப்பொருள்களும் தானாய்⋆
நிகழ்கின்றநேர்காட்டிநிற்க⋆ மகிழ்மாறன்
எங்கும் அடிமைசெய இச்சித்து வாசிகமாய்⋆
அங்கடிமை செய்தான் மொய்ம் பால் (24)

மொய்ம்பாரும் மாலுக்கு முன்னடிமை செய்துவப் பால்⋆
அன்பால் ஆட்செய்பவரை ஆதரித்தும்⋆ அன்பிலா
மூடரைநிந்தித்தும் மொழிந்தருளும் மாறன் பால்⋆
தேடரிய பத்தி நெஞ்சே செய் (25)

செய்ய பரத்துவமாய்ச் சீரார் வியூகமாய்⋆
துய்ய விபவமாய்த் தோன்றிவற்றுள்⋆ எய்துமவர்க்கு
இந்நிலத்தில் அர்ச்சாவதாரம் எளிதென்றான்⋆
பன்னுதமிழ் மாறன் பயின்று (26)

பயிலும் திருமால் பதந்தன்னில்⋆ நெஞ்சம்
தயலுண்டுநிற்கும் ததியர்க்கு⋆ இயலுடனே
ஆளானார்க்காளாகும் மாறன் அடியதனில்⋆
ஆளாகார் சன்மம் முடியா (27)

முடியாதவாசைமிக முற்று கரணங்கள்⋆
அடியார் தம்மை விட்டவன் பால் படியா⋆
ஒன்றொன்றின் செயல்விரும்ப உள்ளதெல்லாம் தான்விரும்ப⋆
துன்னியதே மாறன்தன் சொல் (28)

சொன்னாவில் வாழ்புலவீர் சோறு கூறைக்காக⋆
மன்னாத மானிடரை வாழ்த்துதலாலென்னாகும்⋆
என்னுடனே மாதவனை ஏத்துமெனும் குருகூர்⋆
மன்னருளால் மாறும் சன்மம் (29)

சன்மம் பலசெய்து தான் இவ்வுலகளிக்கும்⋆
நன்மையுடைய மால்குணத்தைநாடோறும்⋆ இம்மையிலே
ஏத்துமின்பம் பெற்றேன் எனும் மாறனை உலகீர்⋆
நாத்தழும்பவேத்தும் ஒருநாள் (30)

‡ஒருநாயகமாய் உலகுக்கு⋆ வானோர்
இருநாட்டில் ஏறியுய்க்கும் இன்பம் திரமாகா⋆
மன்னுயிர்ப்போகம் தீது மாலடிமையே இனிதாம்⋆
பன்னியிவை மாறனுரைப் பால் (31)

பாலரைப்போல் சீழ்கிப் பரனளவில் வேட்கையால்⋆
காலத்தால் தேசத்தால் கைகழிந்து⋆ சால
அரிதான போகத்தில் ஆசையுற்றுநைந்தான்⋆
குருகூரில் வந்துதித்த கோ (32)

www.prapatti.com

கோவான ஈசன் குறை எல்லாம் தீரவே⋆
ஓவாத காலத் துவாதிதனை⋆ மேவிக்
கழித்தடையக் காட்டிக் கலந்த குணமாறன்⋆
வழுத்துதலால் வாழ்ந்ததிந்த மண் (33)

மண்ணுலகில் முன்கலந்து மால்பிரிகையால்⋆ மாறன்
பெண்ணிலைமையாய்க் காதல் பித்தேறி⋆ எண்ணிடில் முன்
போலிமுதலான பொருளை அவனாய் நினைந்து⋆
மேல்விழுந்தான் மையல்தனின் வீறு (34)

வீற்றிருக்கும் மால்விண்ணில் மிக்க மயல்தன்னை⋆
ஆற்றுதற்காத் தன்பெருமை ஆனதெல்லாம்⋆ தோற்ற வந்து
நன்று கலக்கப் போற்றி நன்குகந்து வீறுரைத்தான்⋆
சென்ற துயர்மாறன் தீர்ந்து (35)

தீர்ப்பார் இலாத மயல் தீரக் கலந்த மால்⋆
ஓர்ப்பாது மின்றி உடன்பிரிய⋆ நேர்க்க
அறிவழிந்துற்றாரும் அறக்கலங்க⋆ பேர்கேட்டு
அறிவு பெற்றான் மாறன்சீலம் (36)

சீலமிகு கண்ணன் திருநாமத்தால் உணர்ந்து⋆
மேலவந்தன் மேனிகண்டு மேவுதற்குச்⋆ சால
வருந்தி இரவும் பகலும் மாறாமல் கூப்பிட்டு⋆
இருந்தனனே தென் குருகூர் ஏறு (37)

ஏறு திருவுடைய ஈசன் உகப்புக்கு⋆
வேறு படில் என்னுடைமை மிக்கவுயிர்⋆ தேறுங்கால்
எந்தனக்கும் வேண்டா எனும் மாறன் தாளைநெஞ்சே⋆
நந்தமக்குப் பேறாகநண்ணு (38)

நண்ணாது மாலடியை நானிலத்தே வல்வினையால்⋆
எண்ணாராத் துன்பமுறும் இவ்வுயிர்கள்⋆ தண்ணிமையைக்
கண்டிருக்க மாட்டாமல் கண்கலங்கும் மாறனருள்⋆
உண்டுநமக் குற்ற துணையொன்று (39)

‡ஒன்றுமிலைத்தேவிவ்வுலகம் படைத்த மால்⋆
அன்றிஎன ஆரும் அறியவே⋆ நன்றாக
மூதலித்துப் பேசியருள் மொய்மகிழோன் தாள் தொழவே⋆
காதலிக்கும் என்னுடைய கை (40)

கையாரும் சக்கரத்தோன் காதலின்றிக்கேயிருக்கப்⋆
பொய்யாகப் பேசும் புறனுரைக்கு⋆ மெய்யான
பேற்றை உபகரித்த பேரருளின் தன்மைதனைப்⋆
போற்றினனே மாறன் பொலிந்து (41)

‡பொலிக பொலிகவென்று பூமகள்கோன் தொண்டர்⋆
மலிவுதனைக் கண்டுகந்து வாழ்த்தி⋆ உலகில்
திருந்தாதார் தம்மைத் திருத்திய மாறன்சொல்⋆
மருந்தாகப் போகும் மன மாசு (42)

மாசறு சோதி கண்ணன் வந்து கலவாமையால்⋆
ஆசை மிகுந்து பழிக்கஞ்சாமல்⋆ ஏசறவே
மண்ணில் மடலூர மாறன் ஒருமித்தான்⋆
உள்நடுங்கத் தான்பிறந்தவூர் (43)

ஊரநினைந்த மடல் ஊரவுமொண்ணாதபடிக்⋆
கூரிருள்சேர் கங்குலுடன் கூடிநின்று⋆ பேராமல்
தீதுசெய்ய மாறன் திருவுள்ளத்துச்சென்ற துயர்⋆
ஓதுவதிங்கெங்ஙனேயோ (44)

எங்ஙனே நீர் முனிவது என்னையினி நம்பியழகு⋆
இங்ஙனே தோன்றுகின்றதென் முன்னே⋆ - அங்ஙன்
உருவெளிப்பாடா உரைத்த தமிழ் மாறன்⋆
கருதும் அவர்க்கின்பக் கடல் (45)

கடல் ஞாலத்தீசனை முன் காணாமல்நொந்தே⋆
உடனாவனுசரிக்கலுற்று⋆ திடமாக
வாய்ந்தவனாய்த் தான்பேசும் மாறன் உரையதனை⋆
ஆய்ந்துரைப்பார் ஆட்செய்யநோற்றார் (46)

நோற்றநோன்பாதியிலேன் உன்றனை விட்டாற்றகில்லேன்⋆
பேற்றுக்குபாயமுன்றன் பேரருளேசாற்றுகின்றேன்⋆
இங்கென்னிலையென்னும் எழில்மாறன் சொல்வல்லார்⋆
அங்கம் அரர்க்காராவமுது (47)

‡ஆரா அமுதாழ்வார் ஆதரித்த பேறுகளைத்⋆
தாராமையாலே தளர்ந்து மிகத்⋆ தீராத
ஆசையுடன் ஆற்றாமை பேசி யலமந்தான்⋆
மாசறு சீர் மாறன் எம்மான் (48)

மாநலத்தால் மாறன் திருவல்ல வாழ்புகப்போய்⋆
தானிளைத்து வீழ்ந்தவ்வூர் தன்னருகில்⋆ மேல் நலங்கித்
துன்பமுற்றுச் சொன்ன சொலவுகறபார் தங்களுக்கு⋆
பின்பிறக்க வேண்டா பிற (49)

பிறந்துலகம் காத்தளிக்கும் பேரருட் கண்ணா⋆ உன்
சிறந்த குணத்தாலுருகும் சீலத் திறம் தவிர்ந்து⋆
சேர்ந்தனுபவிக்கும் நிலை செய்யென்ற சீர்மாறன்⋆
வாய்ந்த பதத்தே மனமே வைகு (50)

வைகல் திரு வண்வண்டூர் வைகுமிராமனுக்கு⋆ என்
செய்கைதனைப் புள்ளினங்காள் செப்புமென⋆ கைகழிந்த
காதலுடன் தூதுவிடும் காரி மாறன் கழலே⋆
மேதினியீர் நீர் வணங்குமின் (51)

மின்னிடையார் சேர்கண்ணன் மெத்தென வந்தான் என்று⋆
தன்னிலை போய் பெண்ணிலையாய் தான்தள்ளி⋆ உன்னுடனே
கூடேனென்றூடும் குருகையர்கோன் தாள் தொழவே⋆
நாடோறும்நெஞ்சமே நல்கு (52)

நல்ல வலத்தால் நம்மைச் சேர்த்தோன் முன்நண்ணாரை⋆
வெல்லும் விருத்த விபூதியன் என்று⋆ எல்லையறத்
தானிருந்து வாழ்த்தும் தமிழ்மாறன் சொல்வல்லார்⋆
வானவர்க்கு வாய்த்த குரவர் (53)

குரவை முதலாம் கண்ணன் கோலச் செயல்கள்⋆
இரவு பகலென்னாமலென்றும்⋆ பரவுமனம்
பெற்றேன் என்றே களித்துப் பேசும் பராங்குசன் தன்⋆
சொல் தேனில்நெஞ்சே துவள் (54)

துவளறுசீர் மால்திறத்து தொன்னலத்தால்⋆ நாளும்
துவளறுதன் சீலமெல்லாம் சொன்னான்⋆ துவளறவே
முன்னம் அனுபவத்தில் மூழ்கிநின்ற மாறன் அதில்⋆
மன்னுமுவப் பால் வந்த மால் (55)

மாலுடனே தான் கலந்து வாழப் பெறாமையால்⋆
சாலநைந்து தன்னுடைமை தானடையக் கோலியே⋆
தானிகழ வேண்டாமல் தன்னைவிடல் சொல்மாறன்⋆
ஊனமறு சீர்நெஞ்சேயுண் (56)

உண்ணுஞ்சோறாதி ஒரு மூன்றுமெம்பெருமான்⋆
கண்ணனென்றேநீர்மல்கிக் கண்ணிணைகள்⋆ மண்ணுலகில்
மன்னு திருக் கோளூரில் மாயன் பால் போம் மாறன்⋆
பொன்னடியே நந்தமக்குப் பொன் (57)

பொன்னுலகு பூமியெல்லாம் புள்ளினங்கட்கே வழங்கி⋆
என்னிடரை மாலுக்கியம்புமென⋆ மன்னு திரு
நாடு முதல் தூதுநல்கிவிடும் மாறனையே⋆
நீடுலகீர் போய்வணங்கும்நீர் (58)

நீராகிக் கேட்டவர்கள்நெஞ்சழிய⋆ மாலுக்கும்
ஏரார் விசும்பிலிருப்பரிதா⋆ ஆராத
காதலுடன் கூப்பிட்ட காரிமாறன் சொல்லை⋆
ஓதிடவே உய்யுமுலகு (59)

‡உலகுய்யமால்நின்ற உயர் வேங்கடத்தே⋆
அலர்மகளை முன்னிட்டவன் தன் மலரடியே⋆
வன்சரணாய்ச் சேர்ந்த மகிழ்மாறன் தாளிணையே⋆
உன்சரணாய்நெஞ்சமேயுள் (60)



www.prapatti.com

உண்ணிலா ஐவருடனிருத்தி இவ்வுலகில்⋆
எண்ணிலா மாயன் எனைநலிய எண்ணுகின்றான்⋆
என்று நினைந்தோலமிட்ட இன்புகழ்சேர் மாறனெனக்⋆
குன்றிவிடுமே பவக் கங்குல் (61)

‡கங்குல் பகலரதி கைவிஞ்சி மோகமுற⋆
அங்கதனைக் கண்டோர் அரங்கரைப்பார்த்து⋆ இங்கிவள் பால்
என்செய நீர் எண்ணுகின்றதென்னும்நிலை சேர்மாறன்⋆
அஞ்சொலுறநெஞ்சு வெள்ளையாம் (62)

வெள்ளிய நாமம் கேட்டு விட்டகன்ற பின்மோகம்⋆
தெள்ளியமால் தென் திருப்பேர் சென்று புக⋆ உள்ளமங்கே
பற்றிநின்ற தன்மை பகரும் சடகோபற்கு⋆
அற்றவர்கள் தாமாழியார் (63)

ஆழிவண்ணன் தன்விசயம் ஆனவை முற்றும் காட்டி⋆
வாழிதனால் என்று மகிழ்ந்து நிற்க⋆ ஊழிலவை
தன்னை இன்று போல்கண்டு தானுரைத்த மாறன்சொல்⋆
பன்னுவரேநல்லது கற்பார் (64)

கற்றோர் கருதும் விசயங்களுக்கெல்லாம்⋆
பற்றாம் விபவகுணப் பண்புகளை⋆ உற்றுணர்ந்து
மண்ணிலுள்ளோர் தம்மிழவை வாய்ந்துரைத்த மாறன் சொல்⋆
பண்ணிலினிதான தமிழ்ப்பா (65)

பாமருவு வேதம் பகர்மால் குணங்களுடன்⋆
ஆமழகு வேண்டப்பாடாமவற்றை⋆ தூமனத்தால்
நண்ணியவனைக்காண நன்குருகிக் கூப்பிட்ட⋆
அண்ணலை நண்ணார் ஏழையர் (66)

ஏழையர்கள்நெஞ்சை இளகுவிக்கும் மாலழகு⋆
சூழவந்து தோன்றித் துயர்விளைக்க⋆ ஆழுமனம்
தன்னுடனேயவ்வழகைத் தானுரைத்த மாறன் பால்⋆
மன்னுமவர் தீவினைபோம் மாய்ந்து (67)



www.prapatti.com

மாயாமல் தன்னைவைத்த வைசித் திரியாலே⋆
    தீயா விசித்திரமாச் சேர்பொருளோடு ஓயாமல்⋆
வாய்ந்துநிற்கும் மாயன் வளமுரைத்த மாறனைநாம்⋆
    ஏய்ந்துரைத்து வாழு நாள் என்று (68)

எந்தனை நீயிங்கு வைத்தது ஏதுக்கென⋆ மாலும்
    எந்தனக்குமென்றமர்க்குமின்பமதா⋆ நன்றுகவி
பாடவெனக் கைம்மாறிலாமை⋆ பகர்மாறன்
    பாடணைவார்க்குண்டாமின்பம் (69)

இன்பக் கவி பாடுவித்தோனை இந்திரையோடு⋆
    அன்புற்று வாழ் திருவாறன்விளையில்⋆ துன்பமறக்
கண்டடிமை செய்யக் கருதிய மாறன் கழலே⋆
    திண்திறலோர் யாவர்க்கும் தேவு (70)

தேவன் உறை பதியில் சேரப் பெறாமையால்⋆
    மேவுமடியார் வசனாம் மெய்ந்நிலையும்⋆ யாவையும்
தானாம் நிலையும் சங்கித்து அவை தெளிந்த மாறன் பால்⋆
    மாநிலத்தீர் நங்கள் மனம் (71)

நங்கருத்தைநன்றாக நாடிநிற்கும் மாலறிய⋆
    இங்கிவற்றில் ஆசையெமக்குளதென் சங்கையினால்⋆
தன்னுயிரில் மற்றில்நசை தானொழிந்த மாறன்தான்⋆
    அந்நிலையை ஆய்ந்துரைத்தான் அங்கு (72)

அங்கமரர் பேண அவர்நடுவே வாழ் திருமாற்கு⋆
    இங்கோர் பரிவரிலையென்றஞ்ச⋆ எங்கும்
பரிவருளரென்னப் பயம் தீர்ந்த மாறன்⋆
    வரிகழல் தாள் சேர்ந்தவர் வாழ்வார் (73)

வாராமல் அச்சம் இனி மால் தன் வலியினையும்⋆
    சீரார் பரிவருடன் சேர்த்தியையும்⋆ பாருமெனத்
தானுகந்த மாறன்தாள் சார்நெஞ்சே சாராயேல்⋆
    மானிடவரைச் சார்ந்து மாய் (74)

www.prapatti.com

மாயன் வடிவழகைக் காணாத வல்விடாயாய்⋆
அதற விஞ்சி அழுதலற்றும்⋆ தூய புகழ்
உற்ற சடகோபனை நாம் ஒன்றிநிற்கும் போது பகல்⋆
அற்ற பொழுதானதெல்லியாம் (75)

எல்லி பகல்நடந்த இந்தவிடாய் தீருகைக்கு⋆
மெல்லவந்து தான்கலக்க வேணுமென⋆ நல்லவர்கள்
மன்னு கடித்தானத்தே மாலிருக்க மாறன் கண்டு⋆
இந்நிலையைச் சொன்னானிருந்து (76)

இருந்தவன் தான் வந்து இங்கிவரெண்ணமெல்லாம்⋆
திருந்தவிவர் தந்திறத்தே செய்து⋆ பொருந்தக்
கலந்தினியனாயிருக்க கண்ட சடகோபர்⋆
கலந்தநெறி கட்டுரைத்தார் கண்டு (77)

கண்ணிறைய வந்து கலந்தமால் இக்கலவி⋆
திண்ணிலயா வேணுமெனச் சிந்தித்து⋆ தண்ணிதெனும்
ஆருயிரின் ஏற்றம் அதுகாட்ட ஆய்ந்துரைத்தான்⋆
காரி மாறன் தன் கருத்து (78)

கருமால் திறத்தில் ஒரு கன்னிகையாம் மாறன்⋆
ஒருமா கலவி உரைப் பால்⋆ திரமாக
அந்நியருக்காகாது அவன் தனக்கேயாகுமுயிர்⋆
இந்நிலையையோரு நெடிதா (79)

‡நெடுமால் அழகுதனில் நீள்குணத்தில்⋆ ஈடு
படுமாநிலையுடைய பத்தர்க்கு⋆ அடிமைதனில்
எல்லை நிலம் தானாக எண்ணினான் மாறன்⋆ அது
கொல்லை நிலமான நிலை கொண்டு (80)

கொண்ட பெண்டிர் தாம்முதலாக் கூறுமுற்றார் கன்மத்தால்⋆
அண்டினவர் என்றே அவரைவிட்டுத்⋆ தொண்டருடன்
சேர்க்கும் திருமாலைச் சேரும் என்றான்⋆ ஆர்க்குமிதம்
பார்க்கும் புகழ்மாறன் பண்டு (81)

பண்டை உறவான பரனைப் புளிங்குடிக்கே
கண்டு⋆ எனக்கெல்லாவுறவின் காரியமும்⋆ தண்டறநீ
செய்தருள் என்றே இரந்த சீர்மாறன் தாளிணையை⋆
உய்துணை என்றுள்ளமேயோர் (82)

ஓரா நீர் வேண்டினவை உள்ளதெல்லாம் செய்கின்றேன்⋆
நாராயணன் அன்றோநான் என்று⋆ பேருறவைக்
காட்ட அவன் சீலத்தில் கால்தாழ்ந்த மாறனருள்⋆
மாட்டிவிடும்நம் மனத்துமை (83)

மையார் கண் மாமார்பில் மன்னும் திருமாலைக்⋆
கையாழி சங்குடனே காணவெண்ணி⋆ மெய்யான
காதலுடன் கூப்பிட்டுக் கண்டுகந்த மாறன்பேர்⋆
ஓதவுய்யுமே இன்னுயிர் (84)

இன்னுயிர்மால் தோன்றினது இங்கென்னெஞ்சில் என்று⋆ கண்ணால்
அன்னவனைக் காணவெண்ணி ஆண்பெண்ணாய்⋆ பின்னையவன்
தன்னை நினைவிப்பவற்றால் தான் தளர்ந்த மாறனருள்⋆
உன்னுமவர்க்குள்ளம் உருகும் (85)

உருகுமால் என்னெஞ்சம் உன்செயல்களெண்ணிப்⋆
பெருகுமால் வேட்கையெனப் பேசி⋆ மருவுகின்ற
இன்னாப்புடன் அவன் சீர் ஏய்ந்துரைத்த மாறன்சொல்⋆
என்னா சொல்லாதிருப்பதெங்கு (86)

எங்காதலுக்கடி மாலேய்ந்த வடிவழகென்று⋆
அங்காது பற்றாசாவாங்கவன் பால்⋆ எங்குமுள்ள
புள்ளினத்தைத் தூதாகப் போகவிடும் மாறன்தாள்⋆
உள்ளினர்க்குத் தீங்கையறுக்கும் (87)

அறுக்குமிடரென்று அவன் பால் ஆங்குவிட்ட தூதர்⋆
மறித்துவரப் பற்றா மனத்தால்⋆ அறப்பதறிச்
செய்ய திருநாவாயில் செல்ல நினைந்தான்மாறன்⋆
மையலினால் செய்வறியாமல் (88)

மல்லடிமை செய்யும்நாள் மால்தன்னைக் கேட்க⋆ அவன்
    சொல்லும் அளவும் பற்றாத் தொன்னலத்தால்⋆ செல்கின்ற
ஆற்றாமை பேசி அலமந்த மாறனருள்⋆
    மாற்றாகப் போகுமென்தன் மால் (89)

‡மால் உமது வாஞ்சைமுற்றும் மன்னுமுடம்பின் முடிவில்⋆
    சாலநண்ணிச் செய்வனெனத் தானுகந்து⋆ மேலவனைச்
சீரார் கணபுரத்தே சேரும் எனும் சீர்மாறன்⋆
    தாரானோ நந்தமக்குத் தாள் (90)

தாளடைந்தோர் தங்கட்குத் தானே வழித்துணையாம்⋆
    காளமேகத்தை கதியாக்கி⋆ மீளுதலாம்
ஏதமிலா விண்ணுலகில் ஏகவெண்ணும் மாறனென⋆
    கேதமுள்ளதெல்லாம் கெடும் (91)

கெடுமிடர் வைகுந்தத்தைக் கிட்டினாற்போல்⋆
    தடமுடை அனந்தபுரம் தன்னில்⋆ படவரவில்
கண்துயில்மாற்காட்செய்யக் காதலித்தான் மாறன்⋆ உயர்
    விண்தனிலுள்ளோர் வியப்பவே (92)

வேய்மருதோளிந்திரைகோன்⋆ மேவுகின்ற தேசத்தைத்⋆
    தான்மருவாத் தன்மையினால்⋆ தன்னையின்னம் பூமியிலே
வைக்குமெனச் சங்கித்து மால் தெளிவிக்கத் தெளிந்த⋆
    தக்க புகழ் மாறன் எங்கள் சார்வு (93)

சார்வாகவேயடியில் தானுரைத்த பத்திதான்⋆
    சீரார் பலத்துடனே சேர்ந்ததனைச்⋆ சோராமல்
கண்டுரைத்த மாறன் கழலிணையே நாள் தோறும்⋆
    கண்டுகக்குமென்னுடைய கண் (94)

கண்ணனடியிணையில் காதலுறுவார் செயலைத்⋆
    திண்ணமுறவே சுருங்கச் செப்பியே⋆ மன்னவர்க்குத்
தான் உபதேசிக்கை தலைக் கட்டினான் மாறன்⋆
    ஆன புகழ் சேர் தன்னருள் (95)

www.prapatti.com

அருளால் அடியில் எடுத்த மாலன் பால்⋆
    இருளார்ந்த தம்முடம்பையிச்சித்து⋆ இருவிசும்பில்
இத்துடன் கொண்டேக இசைவு பார்த்தேயிருந்த⋆
    சுத்திசொல்லும் மாறன் செஞ்சொல் (96)

செஞ்சொற் பரன் தனது சீராரும் மேனிதனில்⋆
    வஞ்சித்துச் செய்கின்ற வாஞ்சைதனின்⋆ விஞ்சுதலைக்
கண்டவனைக் காற்கட்டிக் கைவிடுவித்துக் கொண்ட⋆
    திண்திறல் மாறன் நந்திரு (97)

திருமால் தன் பால் விருப்பம் செய்கின்றநேர்கண்டு⋆
    அருமாயத்தன்ற கல்விப்பானென்⋆ பெருமால்நீ
இன்றென் பால் செய்வானெனென்ன இடருற்று நின்றான்⋆
    துன்னு புகழ் மாறனைத்தான் சூழ்ந்து (98)

‡சூழ்ந்துநின்ற மால்விசும்பில் தொல்லைவழி காட்ட⋆
    ஆழ்ந்ததனை முற்றும் அனுபவித்து⋆ வாழ்ந்தங்கு
அடியருடனேயிருந்தவாற்றையுரை செய்தான்⋆
    முடிமகிழ்சேர் ஞான முனி (99)

‡முனிமாறன் முன்புரைசெய் முற்றின்பம்நீங்கித்⋆
    தனியாகிநின்று தளர்ந்து⋆ நனியாம்
பரம பத்தியால்நைந்து பங்கையத்தாள் கோனை⋆
    ஒருமையுற்றுச் சேர்ந்தான் உயர்ந்து (100)

॥ ஸ்ரீமணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com